இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 51 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 13 – புதன்கிழமை 30 செப்டம்பர் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 85 - Issue 51 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 13 - Wednesday 30 September 2026 - Madurai 10 Pages ₹ 5.00

4 மாத ஆட்சியில் 200 கொலைகள், 300 பாலியல் வன்கொடுமைகள் :

த.வெ.க. ஆட்சிக்கு பாடம் புகட்ட உதயசூரியனுக்கு வாக்களிப்பீர்!

தாராபுரம் தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரத்தில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வேண்டுகோள்!

தாராபுரம், செப். 30 - த.வெ.க.வின் 4 மாத ஆட்சியில் 200 கொலைகளும், 300 பாலியல் வன்கொடுமைகளும், 8 காவல் மரணங்களும் 10 ஆணவப் படுகொலைகளும் நடந்தேறி தமிழ்நாட்டிற்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இங்கு த.வெ.க. ஆட்சிக்குப் பாடம் புகட்ட கழக வேட்பாளரை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்திடுவீர் என்று தாராபுரம் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் உரையாற்று கையில் வேண்டுகோள் விடுத்தார்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் உள்ள மானூர்பாளையம் பகுதியில் திமுக துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசியதாவது :-

இந்த இடைத்தேர்தல் வருவதற்கான காரணம், அதிமுகவில் இருந்து ஆளுங் கட்சியாக இருக்கக்கூடியவர்கள், தீர்ந்துபோன சக்தி என்று கூறினார்களே? அங்கிருந்து ஒரு வேட்பாளரைத் தங்கள் பக்கம் இழுத்து, ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எப்படியாவது சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகவே அந்த வேட்பாளரைத் திருடிக் கொண்டுவந்து, அவரைப் பதவி விலகச் செய்து, மீண்டும் இந்த இடைத்தேர்தலை நடத்துகிறார்கள்.

அதே வேட்பாளர், முன்னர் உங்களிடம் வந்து இரட்டை இலைச் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்றார்; வெற்றி பெற்ற பிறகு நன்றி சொல்லக்கூட அவருக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் இப் போது மீண்டும் நான் விசில் அடித்துக் கொண்டு வருகிறேன் என்று உங்களிடம் ஓட்டு கேட்க வருகிறார்.

தீர்ந்து போன சக்தியும் புண்ணிய பராசக்தியும்!

தங்களுக்கு வாக்களித்த மக்களுக்குக் கூட நேர்மையாகவும், நியாயமாகவும் நடந்துகொள்ளாத ஒருவரை மீண்டும் மக்களிடம் கொண்டுவந்து நிறுத்துகிறார் கள். அதுவரை இதே சத்யபாமாவை கவே மாறிவிட்டார். ஏனென்றால், தீர்ந்துபோன சக்தி என்றார்கள்; இப்போது புண்ணிய பராசக்தி என்பது போல உங் களிடம் கொண்டுவந்து நிறுத்துகிறார்கள். இத்தனை நாட்களாக அவர் தொலைந்து போன சக்தி; ஆனால் தமிழக வெற்றிக் கழகத்தில் வந்து சேர்ந்தவுடனே, ஆட்சி யாளர்களுக்கு அவர் திடீரென்று தங்க சத்யபாமா ஆகிவிட்டார்.

இதுதான் தூய சக்தி செய்யும் வேலையா? இது திருட்டுச் சக்தி செய்யும் வேலை. உண்மையான தூய சக்தி இந்த வேலையைச் செய்யாது. அம்மையார் ஜெயலலிதா மறைந்த பிறகு, குறுக்கு வழியில் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவ தற்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தும், பின்வாசல் வழியாக ஆட்சியை நாங்கள் கைப்பற்ற மாட்டோம் என்று உறுதியாக நின்றாரே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அவர்தான் உண்மையான தூய சக்தி.

திரும்பத் திரும்ப தூய சக்தி, தீய சக்தி, தொலைந்துபோன சக்தி என்று முதல மைச்சர் விஜய் பேசுகிறார். அவர் இப் போது நமக்குச் சொந்தக்காரப் பையனா My dear sweet uncle என்கிறார். அத னால் அவரைப் பார்த்து இனிமேல் நான் அன்புத் தம்பி விஜய் என்று அழைக்க லாம் என்றிருக்கிறேன்.

அன்புத் தம்பி விஜய், காலையில் எழுந்தவுடனேயே தி.மு.க.வைத்தான் நினைத்துக்கொண்டு எழுகிறார். வீட்டி லிருந்து அலுவலகத்திற்குப் புறப்படும் போதும் தி.மு.க. நினைப்புதான்; அமர்ந் திருக்கும்போதும், முகம் கழுவும்போதும் தி.மு.க.தான். டிபன் பாக்ஸைத் திறந்தால் அப்போதும் தி.மு.க.வின் நினைப்புதான். அதனால்தான் மதுராந்தகத்தில் தேர்தல் வாக்குறுதிகளைப் பேசி வாக்கு கேட்கும் நேரத்தில், 21 நிமிடங்கள் ஆற்றிய உரை யில் எத்தனை முறை தி.மு.க. என்று கூறினார் தெரியுமா. கிட்டத்தட்ட 40 முறைக்கும் மேலாக தி.மு.க. என்று கூறி யிருக்கிறார்.

மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் பெயர் தி.மு.க.!

நமக்காக அவரே சென்று தி.மு.க., தி.மு.க. என்று ஓட்டு கேட்கிறார். இன்றைக்கு அ.தி.மு.க.வில் இருக்கக் கூடிய எடப்பாடி பழனிசாமி போன்றவர் கள், தன் கையில் கட்சி இருந்தால் போதும் என நினைத்து, அக்கட்சியையே ஒரு நிலையற்ற இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டார்கள். எனவே, இங் குள்ள ஆட்சிக்குச் சரியான பாடத்தைப் புகட்ட உதயசூரியன் சின்னத்தில் வாக்க ளித்துச் சகோதரி சுகன்யா அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தூய சக்தி என்று கூறுகிறாரே, த.வெ.க. கட்சியில் உள்ள ஒரு வழக்கறி ஞர், அரசு வழக்கறிஞராக நியமிக்க ரூ.30 லட்சம் லஞ்சம் வாங்கினார் என்று நீர்வளத்துறை அமைச்சர் மீது புகார் அளிக்கிறார். அதற்காகத் தூய சக்தி என்ன செய்தது. புகார் அளித்த அந்தப் பெண் ணையே கட்சியிலிருந்து உடனடியாக நீக்கியது. ஆனால் அமைச்சர் தொடர்ந்து அமைச்சராகவே நீடிக்கிறார்.

ஈரோடு பகுதியில் மற்றொரு அமைச் சர் சாயப்பட்டறைகளிடம் ரூ.9 கோடி முதல் ரூ.10 கோடி வரை வசூல் செய்திருப் பதாகக் குற்றச்சாட்டு எழுகிறது. ஆட்சிக்கு வந்த நான்கே மாதங்களில் 10 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள். இதுவரை ஒன்றுமே இல்லை.

மோசமாக மிரட்டியவர் அமைச்சராக நீடிக்கிறார்!

ஆண், பெண் சமம்; பெண்களிடம் மரியாதையாகப் பேச வேண்டும் என்று கூறுகிறீர்கள். ஒரு பெண்ணை தவறாகப் பேசுவது தவறென்றால், ஓர் ஆணைத் தவறாகப் பேசுவது மட்டும் சரியாகி விடாது. உங்கள் அமைச்சரே உங்கள் கட்சியின் நிர்வாகி ஒருவரை மிரட்டும் தொனியில் மிக மோசமாகப் பேசியிருக் கிறார். அவர் இன்றளவும் அமைச்சராகத் தானே தொடர்கிறார்.

ஐ.பி.எல். போட்டியின் போது ஆப்பிள் கைபேசியை வைத்துக்கொண்டு குழந் தைக்கு மருந்து நுணுக்கிக் கொண்டிருந் தாரே, அவரை அழைத்து ஒரு இரத்தப் பரிசோதனைதான் செய்யவில்லை. அது குழந்தைக்கான மாத்திரையா அல்லது அவருடைய மாத்திரையா என்று தெரிந் திருக்குமே, அதுபற்றி என்ன விசாரணை தூய சக்தி நடத்தியது.

ஒருநாளைக்கு இத்தனை முறை தி.மு.க. என்று கூறுவாரா எனத் தெரியவில்லை. ஆனால் தம்பி விஜய்க்கு மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் பெயர் எதுவென்று தெளிவாகத் தெரிந்திருக்கிறது.

பொதுமக்களாகிய நீங்கள் ஜனநாய கத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றா லும், மக்களுடைய உரிமைகளைப் பாது காக்க வேண்டும் என்றாலும், தேர்ந்தெடுத்த உறுப்பினர்களைப் பத்திர மாக வைத்துக்கொள்ளத் தெரிந்த அண் ணன் தளபதியின் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே வாக்களியுங்கள்.

இன்றைக்கு எத்தனை சோதனைகள் வருகிறது என்று பார்க்கிறோம். வாரத் திற்கு ஒருமுறை நமது அண்ணன் நேரு அவர்களின் வீட்டிற்குச் சோதனையிட வருகிறார்கள். யாரைப் பார்த்தாலும் வழக்கு, கைது நடவடிக்கை. ஆனால், இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்

> **அம்மையார் ஜெயலலிதா மறைந்த பிறகு, குறுக்கு வழியில் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு எல்லா வாய்ப்புகளும் இருந்தும், பின்வாசல் வழியாக ஆட்சியை நாங்கள் கைப்பற்ற மாட்டோம் என்று உறுதியாக நின்றாரே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அவர்தான் உண்மையான தூய சக்தி.**

தில் இருந்து ஒரு சட்டமன்ற உறுப்பி னரோ, மக்கள் பிரதிநிதியோ தடம் மாறி யிருக்கிறாரா என்றால், இல்லை என்று பெருமையோடு கூறுவேன்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் :

த.வெ.க. அரசைக் கண்டித்து மீனவர்கள் போராட்டம்!

கருப்புக்கொடி ஏந்தி பேரணி!

சென்னை, செப்.30 -

சென்னை பட்டினம்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் த.வெ.க. அரசின் முடிவைக் கண்டித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் பெண் ஒருவர் மயக்கமுற்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் விளையாட்டு மைதானத்தில் எண் ணூர் முதல் கோவளம் வரை உள்ள அனைத்து மீனவ கிராம மக் கள் சேர்ந்து கண்டனப் போராட்டத் தில் ஈடுபட்டு உள்ளனர்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலை மைச் செயலகம் அமைக்கப்பட்டால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப் படும் என்றும், த.வெ.க. அரசு தனது ஆணவப்போக்கை கைவிட்டு உடனடியாக அரசா ணையை ரத்து செய்ய வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

பட்டினப்பாக்கத்தில் புதிய தலை மைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரி வித்து, கருப்பு கொடி ஏந்தி மீனவர் கள் பேரணியும் சென்றனர்.

அப்போது பட்டினப்பாக்கம் புதிய தலைமைச் செயலகம் தொடர்பான அரசாணையை ரத்து செய்ய கோரி முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பேசுகையில் எங்களை குழிதோண்டி புதைச்சுட்டு இந்த நிலத்தை எடுத்துக்கோங்க.. சாகுற வரைக்கும் நாங்க இங்க தான் இருப்போம் என ஆவேசமுடன் கூறினர். மீனவர்களின் போராட் டம் தீவிரமடைந்துள்ளதை அடுத்து சென்னை பட்டினப்பாக்கத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர். போராட்டத்தின் போது பெண் ஒருவர் மயக்க முற்றதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு ரூ.15 லட்சம் லஞ்சம்!

த.வெ.க. நிர்வாகியிடம் லஞ்ச ஒழிப்புத்துறை விசாரணை!

மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவு!

மதுரை, செப். 30 -

குமரி மாவட்ட அரசு வ ழ க் க றி ஞ ர் நியமனத்திற்காக த.வெ.க. நிர்வாகி அனிஷ் ரூ.15 லட் சம் லஞ்சம் கேட்கும் ஆடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்ப டுத்திய நிலையில், அது குறித்து லஞ்ச ஒழிப்புத் துறை விசாரணை நடத்த உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. இந்த மனுவை விசாரித்த நீதிபதி முருகன், அரசு வழக்கறி ஞர் பணியை யார் விற் பனை செய்தது என்று கேள்வி எழுப்பியுள்ள துடன், இந்த நியமனம் தொடர்பான லஞ்ச புகாரை லஞ்ச ஒழிப்புத் துறை விசாரிக்க வேண் டும் என்றும் உத்தரவிட் டுள்ளார்.

அரசு வழக்கறிஞர் நிய மன முறைகேடு புகாரை லஞ்ச ஒழிப்புத் துறை விசாரிக்க உத்தரவிடக் கோரி கன்னியாகுமரி யைச் சேர்ந்த ஜெகன்ராஜ் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் இந்த பொதுநல மனுவைத் தாக் கல் செய்திருந்தார்.

அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் லஞ்சப் பணம் கைமாறியுள்ளதாக வும், தகுதியற்றவர்கள் நிய மிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டி, இந்த முறைகேடு குறித்து லஞ்ச ஒழிப்புத் துறை (DVAC) விசாரணை நடத்த நீதி மன்றம் உத்தரவிட வேண் டும் எனக் கோரப்பட்டி ருந்தது.

இந்த வழக்கை நேற்று உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்பொழுது, "லஞ்சம் கொடுத்து வழக் கறிஞர்களாக வர வேண் டுமா?" என்றும் "இவர்கள் நாட்டை காப்பாற்றுவார் களா அல்லது சட்டத்தைப் பாதுகாப்பார்களா?" என்றும் கடுமையான அதி ருப்தியைத் தெரிவித் துள்ளார்.

சட்டத் துறையிடம் இருந்து உரிய பதில் கிடைத்தவுடன், அடுத்த 4 வாரங்களில் இது தொடர் பாக உரிய விசாரணை நடத்தித் தகுந்த நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று லஞ்ச ஒழிப்புத் துறை மற்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.